ஆய்வுப் பணிகளிலே அரசு முழுமையாக இப்போது ஈடுபட்டிருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் ஏதேனும் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அது அரசினுடைய கவனத்திற்கு வரும் என்று சொன்னால், நிச்சயமாக உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

கசிவுநீர்க் குட்டைகள்

***17789—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம், கருங்கல்லூர், லக்கம்பட்டி ஊராட்சிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி, காவேரிபுரம் கிராமத்தில் *2006–2007* ஆம் நிதியாண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் ரூ. *4.15* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ. *1.90* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், கருங்கல்லூர் கிராமத்தில் ரூ.*2.50* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும் கட்டப்பட்டு *31–3–2007*–ல் பணிகள் முடிவுற்றுள்ளன.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதிக்கு உட்பட்ட காவேரிபுரம் ஊராட்சி, கருங்கல்லூர் ஊராட்சி, லக்கம்பட்டி ஊராட்சி போன்ற பல்வேறு ஊராட்சிகள் பாசன

வசதி இல்லாத, கிணற்று நீர்ப் பாசனத்தையே நம்பி இருக்கிற பகுதிகள். அதிலும் அங்கே அடிக்கடி கிணறுகளில் நீர் வற்றி வறண்டுவிட்டு, விவசாயத்திற்கு பாதிப்பாக இருக்கிற காரணத்தால், இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்த இரண்டு தடுப்பணைகள் கட்டப்பட்டிருந்தாலும், இன்னும் அந்த ஊராட்சிகளிலே பல தடுப்பணைகள் கட்டுவதற்கு நீர்த் தேக்கம் செய்து, கிணற்றுக்கு நீர் ஊற்று பெறுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, வாய்ப்புகள் இருக்கிற பகுதிகளில், நீர் ஓடைகள் இருக்கிற பகுதிகளில் இன்னும் கூடுதலாக கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டுவதற்கு, தடுப்பணை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997–98–லும் பல கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டிலும்கூட 2007–2008–வது ஆண்டில் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காவேரிபுரத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் இரண்டு சிறிய தடுப்பணைகளும் கட்டப்படவுள்ளன.

மேலும், கருங்கல்லூர் கிராமத்திலே ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் 2 சிறிய தடுப்பணைகளும், லக்கம்பட்டியில் 6 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு கசிவுநீர்க் குட்டைகளும், மொத்தம் ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்டப்பட பரிசீலனையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

குடியிருப்புகள்

***380—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—